**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 253-2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of LW1 | | | Examined as : PW 1 | | |
| Name | : | அமுதா | Defence | : | |
| Father/Husband Name | : | மகாராஜன் | Court | : | |
| Village | : | ஊர்குடி | Taluk | : | |
| Calling | : | | | | |
| Age | : | 40/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 10.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 07.30 மணியளவில் எங்கள் தெருவில் ஒரே சத்தமாக இருந்தது. என்னவென்று நான் சென்று பார்த்தபோது அங்கு சுமார் 10-20 நபர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் நடந்த தகராறில் கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் என்னை பிடித்து தள்ளினார்கள். நான் கீழே விழுந்ததில் எனக்கு அடிப்பட்டுவிட்டது. யார் தள்ளினார்கள் என்று தெரியவில்லை. அந்த கூட்டத்தில் எதிரி இருந்ததாலும் அவருக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர் தான் என்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர் மீது மிகை படுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை

சேர்ந்தவர் ஆவார். அவருடன் நான் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 03.10.2025 ம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் இருந்த போது ஆஜர் எதிரி குடித்துவிட்டு என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரியல்ல. மேலும் கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது தலையில் அடித்ததில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது தெருகாரர் என்பதாலும் அவருடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 253-2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of LW3 | | | Examined as : PW 2 | | |
| Name | : | பாஸ்கர் | Defence | : | |
| Father/Husband Name | : | ராஜாங்கம் | Court | : | |
| Village | : | ஊர்குடி | Taluk | : | |
| Calling | : | | | | |
| Age | : | 49/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 10.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

அசா1 மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 03.10.2025 ம் தேதி இரவு 07.30 மணியளவில் அசா1 அவரது வீட்டு வாசலில் இருந்த போது ஆஜர் எதிரி குடித்துவிட்டு அசா1ஐ தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரியல்ல. மேலும் கீழே கிடந்த கட்டையை எடுத்து அசா1ன் தலையில் அடித்ததில் அசா1க்கு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது தெருகாரர் என்பதாலும் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**